# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 10/பேரூ/2024**
**நாள் : 20.09.2024**

திரு. ஜே. ஜாண்றோஸ்,
செந்தறை,
கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ரீத்தாபுரம் முதல் நிலை பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், பாலப்பள்ளம் வழி, ஆலஞ்சி அஞ்சல், செந்தறை என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜே. ஜாண்றோஸ் என்பவரின் 03.04.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.05.2024 அன்று பெறப்பட்டு, 10/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம், பாலப்பள்ளம் வழி, ஆலஞ்சி அஞ்சல், செந்தறை என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜே. ஜாண்றோஸ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

"நான் ரீத்தாபுரம் பேரூராட்சி 8வது வார்டு செந்தறையில் வசித்து வருகிறேன். எங்கள் ஊரில் ஒரு அங்கன்வாடி செயல்பட்டு வருகிறது. அதற்கு செல்லும் "செந்தறை அங்கன்வாடி சாலை" யில் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு தார் போடப்பட்டதாகும். மேற்படி சாலைக்கு மழைநீர் வடிகால் கிடையாது. எனவே, சாலையானது குண்டும் குழியுமாக குழந்தைகள் செல்ல முடியாத நிலையிலுள்ளது. ஊர் மக்கள் தொடர் முயற்சியின் காரணமாக 2022–23 ஆம் வருடம் நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் (NSMT) கீழ் 15.06.2023 அன்று திரு. மணிகண்டன் ஒப்பந்ததாரர் என்பவருக்கு ரூபாய் 75,89,452 தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

சாலை அமைப்பதற்கான எந்தவித முன் தயாரிப்பு பணிகளை மேற்கொள்ளாமலும், மழைநீர் ஓடை அமைக்காமலும், தார் கலவை மற்றும் இயந்திரங்களுடன் 27.10.2023 அன்று பணியாளர்கள் வந்தனர். இதனை தொடர்ந்து வடிகால் ஓடை அமைத்து தரமான சாலை அமைக்குமாறு ஊர்மக்கள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். அதனை ஏற்று, தார் கலவை கொட்டாமல் திரும்பி சென்றனர்.

மீண்டும் எப்பணியும் மேற் கொள்ளாமல் **28.11.2023** அன்று மழை பெய்து கொண்டிருக்கும் வேளையில் தார் கலவையை நேரடியாக கொட்ட தொடங்கினர். தரமான சாலை அமைத்து தரும்படி மீண்டும் ஊர் மக்கள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். அதனை தொடர்ந்து பஞ்சாயத்து செயல் அலுவலர் மற்றும் பஞ்சாயத்து தலைவர் ஊர்மக்களை சந்தித்து உடனடியாக மழைநீர் வடிகால் அமைத்து தரமான சாலை அமைத்து தருவோம் என்று உறுதி கூறினர்.

தொடர்ந்து எப்பணியும் மேற்கொள்ளாததால் **27.12.2023** அன்று ரீத்தாபுரத்தில் நடைபெற்ற "மக்களின் முதல்வர் திட்ட முகாமில் " முறையாக மனு அளித்து ரசீது பெறப்பட்டது. அவை கிடைத்ததற்கான குறுஞ்செய்தியும் பெறப்பட்டது. அதன்பின் எந்த நடவடிக்கையும் இல்லாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

எனவே, தாங்கள் தயைகூர்ந்து வடிகால் அமைத்து தரமான சாலை அமைத்து தர ஆவன செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 15.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் ரீத்தாபுரம் முதல் நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) ரீத்தாபுரம் முதல் நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 08.08.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார் :-

"கன்னியாகுமரி மாவட்டம், ரீத்தாபுரம் முதல் நிலை பேரூராட்சியில் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022-23 (NSMT)-ன் கீழ் ரூ. 93.70 இலட்சம் மதிப்பீட்டில் செந்தறை அங்கன்வாடி சாலை, பனவிளை முதல் ஆனப்பாங்குழி (வழி) ஆயான்விளை சாலை, சலேட் நகர், தாணிவிளை பனவிளை சாலை (கிழக்கு) மற்றும் பிரண்ட்ஸ் காலனி திருப்பு முதல் பண்டாரவிளை சி.எஸ்.ஐ. சர்ச் சாலைக்கு தார் சாலை அமைக்க வேலை உத்தரவு வழங்கப்பட்டு ஒப்பந்ததாரரால் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தார் சாலை அமைப்பதற்கு மட்டுமே நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதியின் அடிப்படையில் கிடைத்த மதிப்பீட்டின்படி ஒப்பந்ததாரரால் வேலை செய்து முடிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் கோரியுள்ள வடிகால் அமைக்கும் பணி மேற்படி நிர்வாக அனுமதியில் இடம் பெறவில்லை. இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி பெற்று உரிய விதிமுறைகளை பின்பற்றி பணியினை மேற்கொள்ளலாம் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் ரீத்தாபுரம் முதல் நிலை பேரூராட்சியின் செயல் அலுவலரும் **03.09.2024** அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு **13.08.2024** தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. வி. ஜாண்றோஸ் **03.09.2024** அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

"ரீத்தாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட செந்தறை அங்கன்வாடி சாலையானது 20 வருடங்களுக்கு முன்பு போடப்பட்டது. மேலும் இச்சாலைக்கு மழைநீர் வடிகால் கிடையாது. ஊர்மக்கள் முயற்சியின் காரணமாக 2022-2023 ஆம் ஆண்டு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் தார்ச்சாலை அமைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம்

நான்கு சாலைகளுக்கும் சேர்த்து ரூபாய் 75.89 இலட்சம் செலவில் ஒப்பந்தாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் இச்சாலையில் மண்ணை மட்டும் நிரப்பி அதன்மீது தரமற்ற தார் சாலையை அமைத்துள்ளனர். மழைநீர் வடிகாலும் அமைக்கவில்லை.

ஆனால், பேரூராட்சியின் சுமார் 626 மீட்டர் நீளமுள்ள மாதா நகர் முதல் ஏழுவிளைப்பற்று வரை செல்லும் சாலையினை சீரமைக்க பேரூராட்சி மன்றத்தால் ரூபாய் 9.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூபாய் 7.91 இலட்சம் செலவினத்தில் சாலை சீரமைக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது புகாராக தெரிவிக்கும் சாலையின் மொத்த நீளமான 212 மீட்டருக்கு ரூ. 75.89 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது என பேரூராட்சியின் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் தெரியவருகிறது. இதன் மூலம், மிகப்பெரிய தொகை கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டு முறைகேடு நடந்துள்ளது என தெரிய வருகிறது. இதற்கு காரணமான பேரூராட்சியின் செயல் அலுவலர் உட்பட தொடர்புடைய அனைவர் மீதும் உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். எனவே இப்பெருந்தொகை செலவினம் மேற்கொண்டும் போடப்பட்ட சாலை தரமற்றிருப்பதால், தரமான சாலையுடன் மழைநீர் வடிகால் அமைக்கவும் ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான ரீத்தாபுரம் முதல் நிலை பேரூராட்சி செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பு வகிக்கும் திருமதி தி. விமலா விஜி என்பவர் நிர்வாகப் பணி காரணமாக தன்னால் விசாரணைக்கு வர இயலாத காரணத்தை தொவித்து, தனது சார்பாக விசாரணைக்கு கலந்து கொள்ள பேரூராட்சியில் பொருத்துநராக பணியாற்றும் திரு. அ. ஜெயபாலன் என்பவரை பரிந்துரை செய்ததன் அடிப்படையில், பேரூராட்சியில் பொருத்துநராக பணியாற்றும் திரு. அ. ஜெயபாலன் என்பவர் 03.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

''15.03.2023 அன்று நடைபெற்ற திட்ட அனுமதி குழுக் கூட்ட குறிப்பின்படி கன்னியாகுமரி மாவட்டம் ரீத்தாபுரம் பேரூராட்சியில் 2022-2023-ஆம் ஆண்டு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.93.70 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணி மேற்கொள்ள அரசாணை (ப) எண். 192, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை நாள் 31.03.2023-ன் படி நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால், மழைநீர் வடிகால் அமைப்பதற்கு இத்திட்டத்தின் கீழ் அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்படவில்லை. மேற்படி பணிக்கு ரீத்தாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, குறைந்த ஒப்புந்தப்புள்ளி வழங்கிய ஒப்புந்தாரர் மூலம் செந்தறை-அங்கன்வாடி சாலை, பனவிளை-ஆனப்பாங்குழி வழி ஆயன்விளை வரையுள்ள சாலை, சலேட் நகர் - தாணிவிளை பனவிளை சாலை, ப்ரண்டஸ் காலனி திருப்பு முதல் பனவிளை CSI சர்ச் சாலை ஆகிய நான்கு சாலைகளுக்கு மொத்தம் ரூபாய் 93.70 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் திட்டத்தின் கீழ் தார் சாலைகள் அமைப்பதற்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீட்டிலேயே ஒப்பந்தப்புள்ளி மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தரமான சாலை அமைக்கப்பட்டதற்கு சான்றாக புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

செந்தறை அங்கன்வாடி சாலையின் மொத்த நீளம் சாலைப்பதிவேட்டின்படி 425 மீட்டர் ஆகும். இச்சாலையின் அகலம் 5 மீட்டர் ஆகும். சாலை அமைக்கப்பட்ட அகலம் 4.00 மீட்டர் ஆகும். சாலையின் மொத்த அகல அளவு கூடியும், குறைந்தும் இருப்பதால், வடிகால் அமைப்பதற்கு இயலாது எனவும் மற்றும் சரியான Disposal Point-ம் இல்லை எனவும் கல்லுக்கூட்டம் முதல் நிலை பேரூராட்சியின் இளநிலை பொறியாளர் சான்று

அளித்துள்ளார். இந்நிலையில் மேற்காணும் சாலையில் மழைநீர் வடிகால் அமைக்க இயலாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ரீத்தாபுரம் முதல் நிலை பேரூராட்சியின் செயல் அலுவலரால் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 8.08.2024 மற்றும் 2.09.2024 நாளிட்ட அறிக்கைகளில் உள்ள விவரங்களையும் மேல் வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளுமாறும் பணிவுடன் கேட்டு கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) ரீத்தாபுரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 02.09.2024 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் புகாரினை குறித்து கீழ்க்காணும் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

"கன்னியாகுமரி மாவட்டம், ரீத்தாபுரம் முதல்நிலை பேரூராட்சியில் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022-23 (NSMT)-ன் கீழ் ரூ. 93.70 இலட்சம் மதிப்பீட்டில் செந்தறை அங்கன்வாடி சாலை, பனவிளை முதல் ஆனப்பாங்குழி (வழி) ஆயான்விளை சாலை, சலேட் நகர், தாணிவிளை பனவிளை சாலை (கிழக்கு) மற்றும் பிரண்ட்ஸ் காலனி திருப்பு முதல் பண்டாரவிளை சி.எஸ்.ஐ. சர்ச் சாலை அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள அரசால் இத்திட்டத்தின் மூலம் தார் சாலை அமைப்பதற்கு நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து தொழில்நுட்ப அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளது. பின்னர் இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாருக்கு ரீத்தாபுரம் முதல் நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணி ஆணையின்படி ஒப்பந்ததாரரால் வேலை செய்து முடிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் கோரியுள்ள வடிகால் அமைக்கும் பணி மேற்படி நிர்வாக அனுமதியில் இடம் பெறவில்லை. மேலும் மேற்படி சாலையானது அகலம் கூடியும் குறைந்தும் வருவதாலும் மின்கம்பங்கள் சாலை ஓரத்தில் உள்ளதாலும் வடிகால் அமைப்பதற்கு வழிவகை இல்லை. எனவே சாலையின் ஓரத்தில் மழைநீர் வழிந்தோடி செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

<u>சாலைப்பதிவேட்டின்படி சாலைகள் விபரம்</u>

| வ. எண். | சாலையின் பெயர் | நீளம் (கிமீ) | அகலம் | |
|---|---|---|---|---|
| | | | End to End (M) | Category Way (M) |
| 1. | செந்தறை அங்கன்வாடி சாலை | 0.425 | 4.00 | 4.00 |
| 2. | பனவிளை முதல் ஆனப்பாங்குழி (வழி ) ஆயான்விளை சாலை | 0.712 | 4.00 | 3.60 |
| 3. | சலேட் நகர் – தாணிவிளை பனவிளை சாலை (கிழக்கு) | 04.15 | 4.50 | 3.00 |
| 4 | பிரண்ட்ஸ் காலனி திருப்பு முதல் பண்டாரவிளை சி.எஸ்.ஐ. சர்ச் சாலை | 0.784 | 4.00 | 4.00 |

மேற்காணும் விவரங்களை பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

8) மனுதாரரின் புகார் மனு ரீத்தாபுரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் பேரூராட்சியின் பொருத்துநரின் வாக்குமூலம் ஆகியவற்றை உரிய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், செந்தறை என்ற இடத்தை சார்ந்த மனுதாரர் திரு. ஜே. ஜாண்றோஸ் என்பவர் தனது 03.04.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் ரீத்தாபுரம் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட 8வது வார்டில் அமைந்துள்ள செந்தறை அங்கன்வாடி சாலையில் 2022–23 ஆம் ஆண்டு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் அமைக்கப்படாமல் தரமற்ற தார் சாலை அமைக்கப்பட்டுள்ளதாக புகாராக தெரிவித்து, தரமான தார் சாலையுடன் மழைநீர் வடிகாலும் அமைக்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

2022–2023 ஆம் ஆண்டு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பிறவற்றுள், கன்னியாகுமரி மாவட்டம், ரீத்தாபுரம் முதல்நிலை பேரூராசிக்குட்பட்ட கீழ்க்காணும் 4 சாலைகளுக்கு மொத்தம் ரூ. 93.70 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலையினை அமைத்திட அரசால் அரசாணை (ப) எண்.192 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.03.2023–ல் நிர்வாக ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

<u>தார் சாலை அமைக்க அரசின் நிர்வாக அனுமதி</u>

| வ. எண். | சாலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | அகலம் (கி.மீ) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | செந்தறை அங்கன்வாடி சாலை | 0.425 | 4.00 | 45.70 |
| 2. | பனவிளை முதல் ஆனப்பாங்குழி (வழி) ஆயான்விளை சாலை | 0.712 | 4.00 | |
| 3. | சலேட் நகர் – தாணிவிளை பனவிளை சாலை (கிழக்கு) | 04.15 | 4.00 | 48.00 |
| 4. | பிரண்ட்ஸ் காலனி திருப்பு முதல் பண்டாரவிளை சி.எஸ்.ஐ. சர்ச் சாலை | 0.784 | 4.00 | |
| | மொத்தம் | 2.336 | | **93.70** |

மேற்காணும் பட்டியலின் மூலம் மொத்தம் 2.336 கி.மீ நீளமும் ஒவ்வொரு சாலையும் 4 மீட்டர் அகலமும் கொண்ட 4 சாலைகளுக்கு தார் சாலை அமைக்க மொத்தம் ரூ.93.70 இலட்சம் மதிப்பீட்டில் அரசால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பேரூராட்சிகள் இயக்குநரக கண்காணிப்பு பொறியாளரின் செயல்முறைகள் ந.க.எண்.17124/2021/ஆ5 நாள் 19.04.2023ன் மூலம் மேற்காணும் பணிக்கு தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது என்பதை ஆவணங்களின் வாயிலாக தெரியவருகிறது.

இதன் தொடர்ச்சியாக, ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்பந்ததாரர் மூலம் 4 சாலைகளுக்கான தார் சாலை அமைக்கும் பணி முடிக்கப்பட்டதை செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள புகைப்படங்களின் மூலமும் அறிய முடிகிறது. இது குறித்து பேரூராட்சியின் சாலை பதிவேடுகளில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் ஆவணத்தின் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது.

மேலும், மனுதாரர் தனது புகார் மனுவில் மழைநீர் வடிகால் அமைக்கப்படாதது குறித்து, கல்லுக்கூட்டம் முதல்நிலை பேரூராட்சி இளநிலை பொறியாளர் தனது 30.08.2024 நாளிட்ட சான்றின் மூலம் செந்தறை அங்கன்வாடி சாலையானது, சாலைப் பதிவேட்டின்படி மொத்தம் நீளம் 425 மீட்டரும் அகலம் 4 மீட்டரும் உள்ள நிலையில் மேற்படி சாலையின் அகலம் கூடியும், குறைந்தும் இருப்பதால் வடிகால் அமைப்பதற்கு வழிவகை இல்லை என சான்று அளித்துள்ளதாக தெரிய வருகிறது. இது தவிர மேற்காணும் சாலையில் மழைநீர் வடிகால் அமைக்க அரசால் நிர்வாக அனுமதியும் வழங்கப்படவில்லை என்பதும் தெளிவாக தெரிய வருகிறது.

மனுதாரர் தனது வாக்குமூலத்தில் புகாராக தெரிவிக்கும் 212 மீட்டர் நீளமுள்ள 4 சாலைகளுக்கு ரூ.75.89 இலட்சம் செலவினம் முறைகேடாக மேற்கொள்ளப்பட்டுள்ள புகாருக்கு, அரசால் நிர்வாக அனுமதி பெறப்பட்டு மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரக கண்காணிப்பு செயற்பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதியுடன் 4 சாலைகளின் மொத்த நீளமான 2.336 கிலோ மீட்டர் தூர சாலைகளுக்கு மொத்தம் ரூ.93.70 இலட்சம் செலவினத்தில் உரிய தொழில் நுட்ப அனுமதியுடன் செயல்படுத்தப்பட்டது என்பதை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்த ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது. இந்நிலையில் ரீத்தாபுரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையை ஏற்று, இப்புகார் மனு மீது நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, செப்டம்பர் 20 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. ஜே. ஜாண்றோஸ்,
   செந்தறை,
   ஆலஞ்சி அஞ்சல், பாலப்பள்ளம் வழி,
   கன்னியாகுமரி மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
   ரீத்தாபுரம் பேரூராட்சி,
   கன்னியாகுமரி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை – 28
4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
   (பெயர்பிடப்பட்ட உரையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

24/9/24

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை-600 032